# மனதில் உறுதி வேண்டும்!

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தன்முனைப்புத் திறன் நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 24-4-2016அன்று, உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில், “மனதில் உறுதி வேண்டும்” என்ற நிகழ்ச்சியை நடத்தியது. தமிழ் மொழி விழா 2016ன் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் இது நடைபெற்றது.

அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு, இச்சங்கம் தமிழ் மொழியில் பயிற்சியளித்து, “மாணவர்கள் வழங்கும் கவிதை மாலை” என்ற புதிய அங்கமும் இளையர்களை ஈர்க்கும்வண்ணம் இடம் பெற்றது.

“மனதில் உறுதி வேண்டும்” என்ற தலைப்பில் தமிழக தொலைக்காட்சிப் படைப்பாளர், கோபிநாத் உரையாற்றினார். எதிர்மறையான சிந்தனைகளுக்கு எப்போதும் இடமளிக்கக்கூடாது என்றும், தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழர்களின் கலாச்சார, பண்பாட்டுப் பின்னணிகளையும், நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தினார். தன்னம்பிக்கை என்பது நம்மிடமே இருக்கிறது, அதை நாம் சரியாக வெளிக்கொணர வேண்டும் என்றார்.

செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், திரு. விக்ரம் நாயர், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, தமிழ் மொழி பேசுவதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளில் 52 நிகழ்ச்சிகள் நடத்தி, கல்வி சார்ந்த சமுதாயப் பணிகளை சிங்கப்பூரில் ஆற்றியிருப்பதைப் பாராட்டினார். சிறப்பு விருந்தினர், கவிதை மாலை வழங்கிய மாணவ மாணவியர்களுக்கும், GCE “A” LEVEL தேர்வில், உயர்தமிழ் உட்பட பல பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கும், பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.





பேராசியர், முனைவர் சுப.திண்ணப்பன் ஆற்றிய தமிழ்ப்பணிகளைப் பாராட்டி, இச்சங்கம் அவருக்கு “ஜமாலியன் விருது” வழங்கி கௌரவித்தது.

சங்கத்தின் தலைவர், சிங்கப்பூர் பட்டயக் கணக்காய்வாளர், முனைவர் மு.அ.காதர் ஆற்றிய தலைமையுரையில், “நாம் ஒவ்வொருவரும் இன்று முதல் தமிழ்மொழியிலேயே வீட்டில் பேச வேண்டும் என்றும், நாம் தமிழ் மொழியைக் காப்பதுபோல, பயங்கரவாத, மற்றும் தீவிரவாத, மிரட்டல்களிலிருந்து நமது சிங்கப்பூர் தேசத்தை அதிக விழிப்புணர்வோடும், ஒற்றுமையோடும் ஒருங்கிணைந்துக் காக்க வேண்டும்” என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சங்கத்தின் செயலவை உறுப்பினர், ஃபரீஜ் முஹம்மது நிகழ்ச்சியை வழிநடத்தினார். சங்கத்தின் துணைத் தலைவர், மு.கலந்தர் மைதீன் நன்றி கூறினார்.